**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of BNSS)**

**STC. No. 24/2024**

Name : அப்துல்லா பஹத் (PW-2 Cross ) Date : 24.02.2026

Husband Name : ஷேக் முஜ்புர் ரஹ்மான் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. நான் புகார்தாரரின் மகன் ஆவேன். நான் எனது தந்தையின் வியாபாரத்தில் தலையிடுவேனா என்றால் இல்லை. 2020ம் ஆண்டு எனது வயது 20 ஆகும். அந்த சமயம் நான் நாகப்பட்டிணம் EGS Pillai கலை மற்றும் அறிவியல் கல்லூரியல் படித்துக்கொண்டிருந்தேன். நான் தினமும் வீட்டிலிருந்து தான் கல்லூரிக்கு சென்று வந்தேன். 07.10.2020 அன்று நான் ஊரில் இல்லை என்றால் சரியல்ல. நான் வெளிநாடு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். நான் 2023ம் ஆண்டு இறுதியில் தான் முதன் முதலில் வெளிநாடு சென்றேன். எதிரி எனது அப்பாவை எப்போது பாரக்க வந்தார் என்று நேரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. எதிரி எனது அப்பாவிடம் எப்போது காசோலையை கொடுத்தார் என்றால் 03.06.2023ம் தேதி வேலம்புதுக்குடியில் வைத்து கொடுத்தார். எதிரி கன்னியாகுமரியிலிருந்து கிளம்பி மயிலாடுதுறை வருவதற்கு சுமார் 8 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். அதனால் அவர் மாலை 06.00 மணிக்கு தான் காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. காலையில் தான் கொடுத்தார். எனது அப்பா காசோலையை எப்போது வசூலுக்காக தாக்கல் செய்தார் என்றால் காசோலை கொடுத்த அன்றைய தினமே தாக்கல் செய்தார்.

3. எனது அப்பாவிடம் எதிரி வாங்கிய தொகையை G pay, Online Transacation மூலம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி ரூ. 25 லட்சத்தை

எனது தந்தையிடம் நேரடியாக கொடுத்துவிட்டார் என்றாலும், அதற்கு வட்டி தொகையாக ரூ. 13 லட்சத்தை Online Transaction மூலம் கொடுத்துவிட்டார் என்றாலம் சரியல்ல. புகார்தாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.